www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# செலக்சன்

# 8

## சமூக அறிவியல்

www.Padasalai.Net

அன்பு நிலையம்
மதுரை - 625001

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# செலக்சன்

## எட்டாம் வகுப்பு

## 8

## சமூக அறிவியல்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்
அன்பு நிலையம்
129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625001

விலை ₹ 160

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பாடப்பொருள் அட்டவணை



| வ.எண் | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | ஐரோப்பியர்களின் வருகை | 3 |
| 2. | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 9 |
| 3. | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 16 |
| 4. | மக்களின் புரட்சி | 20 |
| 5. | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 27 |
| 6. | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 34 |
| 7. | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 39 |
| 8. | காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 45 |
| | **புவியியல்** | |
| 1. | பாறை மற்றும் மண் | 51 |
| 2. | வானிலை மற்றும் காலநிலை | 58 |
| 3. | நீரியல் சுழற்சி | 65 |
| 4. | இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 72 |
| 5. | இடர்கள் | 78 |
| 6. | தொழிலகங்கள் | 85 |
| 7. | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 91 |
| 8. | புவிப்படங்களைக் கற்றறிதல் | 99 |
| | **குடிமையியல்** | |
| 1. | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது | 106 |
| 2. | குடிமக்களும் குடியுரிமையும் | 109 |
| 3. | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 112 |
| 4. | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 116 |
| 5. | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 122 |
| 6. | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 131 |
| 7. | நீதித்துறை | 137 |
| | **பொருளியல்** | |
| 1. | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 144 |
| 2. | பொது மற்றும் தனியார் துறைகள் | 152 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# செலக்சன்
## 8 சமூக அறிவியல்

வரலாறு

## அலகு 1. ஐரோப்பியர்களின் வருகை

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

**1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார் ?**

அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
இ) அல்போன்சோ – டி – அல்புகர்க் ஈ) அல்மெய்டா

**விடை : இ) அல்போன்சோ – டி – அல்புகர்க்**

**2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது ?**

அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல்
இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்

**விடை : ஆ) போர்ச்சுகல்**

**3. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது ?**

அ) பிரான்ஸ் ஆ) துருக்கி
இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன்

**விடை : ஆ) துருக்கி**

**4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ்...................நாட்டைச் சேர்ந்தவர்**

அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின்
இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்

**விடை : இ) இங்கிலாந்து**

**5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை**

அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

**விடை : ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை**

**6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்**

அ) ஆங்கிலேயர்கள் ஆ) பிரெஞ்சுக்காரர்கள்
இ) டேனியர்கள் ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

**விடை : ஆ) பிரெஞ்சுக்காரர்கள்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ..................வர்த்தக மையமாக இருந்தது.**
அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள்
இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள்

**விடை : ஈ) டேனியர்கள்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) ..................ல் அமைந்துள்ளது.
**விடை : புது டெல்லி**
2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ்..................என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.
**விடை : இரண்டாம் ஜான்**
3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556 இல் ...............அரசால் கோவாவில் நிறுவப்பட்டது.
**விடை : போர்ச்சுக்கீசிய**
4. முகலாயப் பேரரசர்............இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.
**விடை : ஜஹாங்கீர்**
5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ...........என்பவரால் நிறுவப்பட்டது.
**விடை : கால்பர்ட்**
6. ...........என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார்.
**விடை : நான்காம் கிரிஸ்டியன்**

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. டச்சுக்காரர்கள் | 1664 |
| 2. ஆங்கிலேயர்கள் | 1602 |
| 3. டேனியர்கள் | 1600 |
| 4. பிரெஞ்சுக்காரர்கள் | 1616 |

**விடைகள் :**

| | |
|---|---|
| **1. டச்சுக்காரர்கள்** | **1602** |
| **2. ஆங்கிலேயர்கள்** | **1600** |
| **3. டேனியர்கள்** | **1616** |
| **4. பிரெஞ்சுக்காரர்கள்** | **1664** |

**IV. சரியா/தவறா எனக் குறிப்பிடுக.**

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
**விடை : சரி**
2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
**விடை : சரி**
3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.
**விடை : தவறு**
4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது.
**விடை : சரி**

**V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை ( ✔ ) செய்க.**

1. கவர்னர் நினோ–டி–குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.
3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.
4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.

அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி
இ) 3 மட்டும் சரி ஈ) 1,2 மற்றும் 4 சரி

**விடை : ஈ) 1, 2 மற்றும் 4 சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. தவறான இணையைக் கண்டறிக.**

| | | |
|---|---|---|
| அ) பிரான்சிஸ் டே | – | டென்மார்க் |
| ஆ) பெட்ரோ காப்ரல் | – | போர்ச்சுகல் |
| இ) கேப்டன் ஹாக்கின்ஸ் | – | இங்கிலாந்து |
| ஈ) கால்பர்ட் | – | பிரான்ஸ் |
| **விடை : அ) பிரான்சிஸ் டே** | **–** | **டென்மார்க்** |

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி**

**1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறு குறிப்பு தருக.**

**விடை :**

✶ வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

✶ புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) முதன்மை காப்பகமாகும்.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**

**விடை :**

✶ நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.

✶ நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியால் வெளியிடப்பட்டது.

**3. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி " என ஏன் அழைக்கப்படுகிறார் ?**

**விடை :**

✶ போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.

✶ எனவே அவர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என அழைக்கப்படுகிறார்.

**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.**

**விடை :**

✶ பழவேற்காடு ✶ சூரத் ✶ சின்சுரா ✶ காசிம்பஜார் ✶ பாட்னா ✶ நாகப்பட்டினம் ✶ பாலசோர் ✶ கொச்சின்

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.**

**விடை :**

✶ மசூலிப்பட்டினம் ✶ சூரத் ✶ ஆக்ரா ✶ அகமதாபாத் ✶ புரோச் ✶ சென்னை ✶பம்பாய் ✶கல்கத்தா ✶ ஹுக்ளி ✶ சால்செட்

**VII. விரிவான விடையளி.**

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.**

**விடை :**

**நவீன இந்திய ஆதாரங்கள் :**

✶ நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன.

**சான்றுகளின் வகைகள் :**

✶ நாம் வரலாற்றை அறிவதற்கு எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

✶ அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பிற்குப் பின் பல்வேறு மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

✶ இதன் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறியமுடிந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



✶ எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஆவணக்காப்பகங்கள் :**

✶ ஆவணக்காப்பகங்கள் கடந்த கால நிர்வாக முறைகளைப் புரிந்து கொள்வதற்கான அனைத்துத் தகவல்களுடன் தற்கால மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் :**

✶ பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.

✶ அவை தேசியத் தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு நிறைய தருகின்றன.

✶ அருங்காட்சியகங்கள் நமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்த உதவுகின்றன.

✶ நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன.

---

**2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர் ?**

**விடை : வாஸ்கோடகாமா :**

✶ இவர் 1501 இல் கண்ணனூர், கள்ளிக்கோட்டை, கொச்சி போன்ற பகுதிகளில் வர்த்தக மையத்தை நிறுவினார்.

✶ இதனால் கோபங்கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரைத் தாக்கினார்.

✶ ஆனால் அவர் போர்ச்சுக்கீசியரால் தோற்கடிக்கப்பட்டார்.

✶ பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.

**பிரான்சிஸ்கோ–டி–அல்மெய்டா :**

✶ இந்தியாவிலிருந்த போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு 1505 இல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவார்.

✶ இவர் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்த "நீலநீர்க்கொள்கை" யை பின்பற்றினார்.

**அல்போன்சோ – டி– அல்புகர்க் :**

✶ இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சோ–டி–அல்புகர்க் ஆவார்.

✶ இவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510 இல் கோவாவைக் கைப்பற்றினார்.

✶ 1515 இல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார்.

**நினோ – டி – குன்கா :**

✶ அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ – டி – குன்கா 1530 இல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.

✶ 1534 இல் குஜராத்தின் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார்.

✶ 1537 இல் டையூவைக் கைப்பற்றினார்.

✶ குஜராத்தின் உள்ளூர் தலைவர்களிடமிருந்து டாமனைக் கைப்பற்றிய பின் சால்செட்டை 1548 இல் ஆக்ரமித்தார்.

**இறுதி மையங்கள் :**

✶ போர்ச்சுக்கீசியர் 16 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர்.

✶ வங்காள கடற்கரையில் ஹுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர்.

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர் ?**

**விடை :**

**இராணி எலிசபெத் :**

✶ இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதிப் பட்டயம் வழங்கினார்.

**வில்லியம் ஹாக்கின்ஸ் :**

✶ 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீரிடம் மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சூரத் நகரில் ஓர் வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார்.

✶ ஆனால் போர்ச்சுக்கீசிய தலையீட்டால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை.

**தாமஸ் பெஸ்ட் :**

✶ சூரத் அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார்.

✶ இதனால் மகிழ்ச்சியடைந்த பேரரசர் ஜஹாங்கீர், 1613 இல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.

**சர் தாமஸ் ரோ:**

✶ 1615 இல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ் ரோ அனுப்பிவைக்கப்பட்டார்.

✶ அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்.

✶ பின்னர் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.

**முதல் வணிக மையம் :**

✶ ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை மசூலிப்பட்டினத்தில் 1611 இல் நிறுவினர்.

**பிரான்சிஸ்டே :**

✶ 1639 இல் பிரான்சிஸ்டே என்ற ஆங்கில வணிகர் சென்னப்பநாயக்கரிடம் மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார்.

✶ அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என்ற வணிக மையத்தை நிறுவியது.

**பம்பாய் :**

✶ 1668 இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுக்கு 10 பவுண்டுகள் குத்தகை கொடுத்து பம்பாய் தீவை மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பெற்றது.

**ஜாப்சர்னாக் :**

✶ 1690 ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப்சர்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது.

**கல்கத்தா :**

✶ சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698 இல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.

✶ இந்த மூன்று கிராமங்கள் பின்னாளில் கல்கத்தா நகரமாக வளர்ச்சி பெற்றது.

**வில்லியம் கோட்டை :**

✶ 1696 இல் சுதாநுதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது.

✶ அது 1700 இல் வில்லியம் கோட்டை என அழைக்கப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**VIII. வரைபட திறன்**

**1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. கள்ளிக்கோட்டை | 2. கொச்சின் | 3. மெட்ராஸ் | 4. பாண்டிச்சேரி |
| 5. சூரத் | 6. சின்சுரா | 7. பழவேற்காடு | 8. கல்கத்தா |

**விடை :**




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**IX. உயர் சிந்தனை வினா**

**1. கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது ?**

✶ கி.பி (பொ.ஆ) 1453இல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்டது.

✶ எனவே இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது.

✶ துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது.

✶ இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

**கூடுதல் வினாக்கள்– விடைகள்**

1. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம்........................ **விடை : ஆவணக்காப்பகம்**

2. .................இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். **விடை : ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்**

3. .................என்பவரின் பெரும் முயற்சியால் 1917 ஆம் ஆண்டு சென்னை நாட்குறிப்பு பதிவுகள் வெளியிடப்பட்டது. **விடை : டாட்வெல்**

4..............இல் புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்டது. **விடை : 1690**

5. தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்த போர்ச்சுக்கீசிய மாலுமி...................... **விடை : பார்த்தலோமியோ டயஸ்**

6. இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட முதல் போர்ச்சுக்கீசிய கவர்னர்................. **விடை : பிரான்சிஸ்கோ – டி – அல்மெய்டா**

7. பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் கெல்டிரியா கோட்டையைக் கட்டிய ஆண்டு................ **விடை : 1613**

8. ஜஹாங்கீர் அவைக்கு அனுப்பப்பட்ட ஆங்கிலேய மாலுமி.................... **விடை : வில்லியம் ஹாக்கின்ஸ்**

9................ஆங்கிலேயர்களின் முதல் வணிக மையம் ஆகும். **விடை : மசூலிப்பட்டினம்**

10. தரங்கம்பாடியை டேனியர்கள்..............என அழைத்தனர். **விடை : டானஸ்பெர்க்**

11.................சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினார். **விடை : ஜோதன்பர்க்**

## அலகு 2. வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்**

அ) சுஜா – உத் – தௌலா ஆ) சிராஜ் – உத் – தௌலா

இ) மீர்காசிம் ஈ) திப்பு சுல்தான்

**விடை : ஆ) சிராஜ் – உத் – தௌலா**

**2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு**

அ) 1757 ஆ) 1764 இ) 1765 ஈ) 1775

**விடை : அ) 1757**

**3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை**

அ) அலகாபாத் உடன்படிக்கை ஆ) கர்நாடக உடன்படிக்கை

இ) அலிநகர் உடன்படிக்கை ஈ) பாரிசு உடன்படிக்கை

**விடை : அ) அலகாபாத் உடன்படிக்கை**

**4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி ...................கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.**

அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) ஏதுமில்லை

**விடை : ஆ) இரண்டாம்**

**5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு...........................**

அ) 1756 ஆ) 1761 இ) 1763 ஈ) 1764

**விடை : ஆ) 1761**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

1. 1529 இல் ................மதுரை நாயக்கரானார். **விடை : விஸ்வநாதர்**
2. பூலித்தேவர்.................என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார். **விடை : நெற்கட்டும் செவல்**
3. ............வீர பாண்டிய கட்டபொம்மனின் மனைவி ஆவார். **விடை : ஜக்கம்மாள்.**
4. இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து போரிட்ட முதல் இந்திய பெண்ணரசி..................
**விடை : வேலு நாச்சியார்**
5. திருச்சிராப்பள்ளி பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு................ **விடை : 1801**
6. .....................சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார்.
**விடை : தளபதி அக்னியு**
7. கான்பூரில் புரட்சியை வழிநடத்திச் சென்றவர்.............. **விடை : நானா சாகிப்**

## அலகு –5. இந்தியாவில் கல்வி வளர்ச்சி

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1.வாரணாசியில் இருந்த குருகுலக் கல்விமுறைக்கான சான்றுகளை வழங்கியவர் யார் ?**

அ) நிகிடின் ஆ) யுவான் சுவாங்
இ) டொமிங்கோ பயஸ் ஈ) பெர்னியர் **விடை : ஈ) பெர்னியர்**

**2. வங்காளத்தில் அரசர் தர்மபாலரால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எது ?**

அ) தட்சசீல பல்கலைக்கழகம் ஆ) விக்ரமசீல பல்கலைக்கழகம்
இ) பனாரஸ் பல்கலைக்கழகம் ஈ) நாளந்தா பல்கலைக்கழகம்
**விடை : ஆ) விக்ரமசீல பல்கலைக்கழகம்**

**3. யாருடைய ஆட்சியின் போது சீனத்துறவி யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார் ?**

அ) இரண்டாம் சந்திரகுப்தர் ஆ) மகேந்திர பல்லவன்
இ) முதலாம் நரசிம்ம பல்லவன் ஈ) ஹர்ஷ வர்த்தனர்
**விடை : இ) முதலாம் நரசிம்ம பல்லவன்**

**4. நாளந்தாவை உலகப்பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது ?**

அ) 2006 ஆ) 2007
இ) 2008 ஈ) 2009 **விடை : ஈ) 2009**

**5. கல்கத்தாவில் முதல் மதரசாவை நிறுவிய கவர்னர் ஜெனரல் யார் ?**

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) ராபர்ட் கிளைவ்
இ) வில்லியம் பென்டிங் ஈ) ரிப்பன் **விடை : அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்**

**6. காலங்காலமாக ஓரங்கட்டப்பட்டிருந்த சமூகப் பெண்களுக்கெனப் பள்ளி ஒன்றை நிறுவியவர் யார் ?**

அ) ஜோதிபா புலே ஆ) ராஜா ராம்மோகன் ராய்
இ) கேசவ சந்திர சென் ஈ) சர் சையது அகமது கான்
**விடை : அ) ஜோதிபா புலே**

**7. ஜெர்மானிய சமயப் பரப்பாளர் பார்த்தலோமஸ் சீகன்பால்கு, தமிழ்நாட்டில் எங்கு முதல் பள்ளியை நிறுவினார் ?**

அ) தரங்கம்பாடி ஆ) திருநெல்வேலி
இ) தஞ்சாவூர் ஈ) திருச்சிராப்பள்ளி **விடை : அ) தரங்கம்பாடி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகள்கள், மகன்கள் மட்டுமே............................இந்தியாவில் கல்வி கற்க முடிந்தது. **விடை : பழங்கால**
2. பாப்டிஸ் மிஷன் கல்லூரி 1818 இல் .......................... என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. **விடை : செராம்பூர்**
3. பேராசிரியர் கார்வே................... வில் இந்து விதவைகளுக்காக ஒரு பள்ளியைத் தொடங்கினார். **விடை : பூனா**
4. அகில இந்திய மகளிர் மாநாடு தீர்மானம் இயற்றி .......................... கல்லூரியை டில்லியில் தொடங்கியது. **விடை : இர்வின் சீமாட்டி**
5. முதல் இடைநிலைக் கல்விக்குழுவின் தலைவர் .................ஆவார். **விடை : டாக்டர் இலட்சுமணசாமி முதலியார்**

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பல்கலைக்ழக மானியக்குழு | அ) | 1964 |
| 2. | கோத்தாரி கல்விக்குழு | ஆ) | ஆங்கிலக் கல்வி |
| 3. | மெக்காலே | இ) | பெங்களூரு |
| 4. | இலவச, கட்டாயக் கல்வி | ஈ) | 1956 |
| 5. | டாடாவின் இந்திய அறிவியல் கழகம் | உ) | 6 – 14 வயது வரை |

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | **பல்கலைக்ழக மானியக்குழு** | **ஈ)** | **1956** |
| 2. | **கோத்தாரி கல்விக்குழு** | **அ)** | **1964** |
| 3. | **மெக்காலே** | **ஆ)** | **ஆங்கிலக் கல்வி** |
| 4. | **இலவச, கட்டாயக் கல்வி** | **உ)** | **6–14 வயது வரை** |
| 5. | **டாடாவின் இந்திய அறிவியல் கழகம்** | **இ)** | **பெங்களூரு** |

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.**

1. சிந்துவெளி எழுத்துக்களும் கீழடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பானையோடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களும் ஒன்றே என்பதை வெளிக்காட்ட நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. **விடை : தவறு**
2. நாலடியார் சமணர் வழங்கிய நூலாகும். **விடை : சரி**
3. உப–நி–ஷத் என்ற சொல்லுக்கு, "ஒருவருக்கு அருகில் உட்காருதல்" என்று பொருள். **விடை : சரி**
4. புத்தர், மகாவீரர் மற்றும் கோசலர் ஆகியோர் வேதங்களின் மேலாதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். **விடை : சரி**
5. நாளந்தா ஒரு சிறந்த வேதக் கல்விமையமாக இருந்தது. **விடை : தவறு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V. பின்வருவனவற்றுள் சரியானவற்றை தேர்ந்தெடு.**

**1. i) சமஸ்கிருதக் கல்வியானது வேதங்கள், உபநிடதங்கள், தர்ம சாஸ்திரங்கள் மற்றும் காவியங்களைப் பயிற்றுவித்தது.**

**ii) வாரணாசியில் இருந்த குருகுலக் கல்வி முறையில், ஆசிரியர்கள் தங்கள் இல்லங்களில் கற்பித்தார்கள்.**

**iii) பல்கலைக்கழக வளாகப் பாணியில் மடாலயங்கள் கட்டப்பட்டிருந்தன.**

**iv) குருகுலக் கல்வி முறையில் ஆசிரியர்கள் மன்னர்களின் மானியங்களால் பயனடைந்தனர்.**

அ) i) மற்றும் ii) சரியானவை ஆ) ii) மற்றும் iv) சரியானவை

இ) iii) மற்றும் iv) சரியானவை ஈ) i) மற்றும் iii) சரியானவை

**விடை : ஈ) i) மற்றும் iii) சரியானவை**

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**1. புறநானூறு, கல்வியின் முக்கியத்துவம் குறித்துக் கூறுவதை எழுதவும்.**

**விடை :**

✶ ஏழ்மை நிலையில் இருப்பவரும் ஆசிரியர்களிடம் சென்று கற்க வேண்டும். கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கவேண்டும்.

✶ தாயானவள், தான் பெற்றெடுத்தக் குழந்தைகளில் கற்றறிந்த குழந்தையையேப் பெரிதும் ஆதரிப்பாள். ஆள்பவர்களும் கற்றோரின் சொற்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பின்பற்றுவர்.

✶ மேல்தட்டு மக்கள், கற்றுச் சிறந்தோர் கீழ்த்தட்டு மக்களாயினும் அவர் சொல்லுக்குத் தலை வணங்குவர் எனவும் கல்வியின் பெருமையைப் பெரிதும் போற்றியுள்ளார்.

**2. தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க.**

**விடை :**

✶ தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்கள் ஆற்றியப் பணிகள் அளப்பரியவை. அவைகளுள் பெரிதும் போற்றப்படுபவை திருக்குறள் மற்றும் நாலடியார் ஆகியன.

**3. நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது ?**

**விடை :**

✶ பீகாரில் சிறந்த பௌத்த கல்வி மையமாகத் திகழ்ந்த நாளந்தா பல்கலைக்கழகம், கல்வி பயில்வதற்கென சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பல பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களை ஈர்த்தது.

✶ இங்கு பயின்ற மாணவர்கள் புத்தரின் கோட்பாடுகளைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

✶ கி.பி. (பொ.ஆ) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் நாளந்தாவிற்கு வருகை தந்தபோது, அங்கு மாணவர்கள் வேதங்களோடு நுண்கலைகள், மருத்துவம், கணிதம், வானியல், அரசியல் மற்றும் போர்க்கலை ஆகியவற்றில் பயிற்சியும் பெற்றனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. இடைக்கால இந்தியாவில் இஸ்லாமியக் கல்வியின் சாராம்சத்தைச் சுட்டிக் காட்டவும்.**
**விடை :**

✶ இஸ்லாமியப் பள்ளிகள் (மக்தாப்கள்) எத்தகையத் தடையுமின்றி அனைவருக்குமானதாக செயல்பட்டன.

✶ இங்கு மாணவர்கள், குர்ஆனின் சில பகுதிகளை மனப்பாடம் செய்ததோடு, வட்டார மொழிகள் மற்றும் பாரசீக மொழியினையும் கற்றனர்.

✶ மதரசாக்கள் இறையியல் கற்பிக்கும் பள்ளியாகவும் சட்டப் பள்ளியாகவும் செயல்பட்டன.

✶ இங்குப் பாடத்திட்டமானது குர்ஆன் மற்றும் முகமது நபியின் போதனைகளை (ஹதீஸ்) மையமாகக் கொண்டு அமைந்திருந்தது.

**5. காந்தியடிகளின் வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன ?**
**விடை :**

✶ காந்தியடிகள் வார்தா கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்தார். வார்தா கல்வித் திட்டம் அனைவருக்கும் அடிப்படையான தொடக்கக் கல்வியையும் கைத்தொழில் சிலவற்றைக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

✶ மாணவர்கள் தாங்களே உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தால் அவர்களுக்கான இலவச, கட்டாயக் கல்வி சாத்தியமாகும் என்று நம்பப்பட்டது.

**VII. கீழ்க்கண்டவற்றிற்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**1. சமண, பௌத்த மடாலயங்களில் கல்வியின் முக்கியக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.**
**விடை :**

✶ சமண – பௌத்த மடாலயங்கள் தங்களது துறவிகளுக்குக் கல்வி கற்பித்தும் பயிற்சி அளித்தும் வந்தன. இங்கு கல்வி பயிலவரும் மாணவர்கள் தங்களது கல்வி பயிலும் காலம் முடியும் வரை அங்கேயே தங்கிக் கற்றனர்.

✶ சமணர்களின் சமய இலக்கியங்கள் அர்த்த–மகதி மொழியிலும் பாலி மொழியிலும் இருந்தன.

✶ தென்னிந்தியாவில் மதுரைக்கு அருகிலும் காஞ்சிபுரத்திலும், கர்நாடகாவில் சரவணபெலகொலா என்னும் இடத்திலும் மத போதனைக்கான மையங்களை சமணர்கள் நிறுவினர்.

✶ தமிழ்ச் சொல்லானப் "பள்ளி" என்பது கல்வி கற்பிக்கும் சமண மடாலயங்களைக் குறித்தன.

✶ தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்கள் ஆற்றியப் பணிகள் அளப்பரியவை. அவைகளுள் பெரிதும் போற்றப்படுபவை திருக்குறள் மற்றும் நாலடியார் ஆகியன.

✶ பீகாரில் சிறந்த பௌத்த கல்வி மையமாகத் திகழ்ந்த நாளந்தா பல்கலைக்கழகம், கல்வி பயில்வதெற்கென சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பல பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களை ஈர்த்தது. இங்கு பயின்ற மாணவர்கள் புத்தரின் கோட்பாடுகளைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

✶ இதேபோல் கி.பி. (பொ.ஆ) எட்டாம் நூற்றாண்டில் வங்காளத்தில் பாலர் வம்சத்தின் அரசர் தர்ம பாலர், விக்ரமசீல பல்கலைக்கழகத்தை நிறுவி புத்தரின் கோட்பாடுகளைப் பரவச் செய்தார்.

✶ காஞ்சிபுரத்தில் நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு இணையான புகழ்பெற்றப் பல கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. மெக்காலேயின் புகழ்பெற்ற அறிக்கை பற்றி சுருக்கமாக எழுதுக.**

**விடை :**

✶ வில்லியம் பெண்டிங் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டபோது, பண்பட்ட உயர்தட்டு இந்தியர்கள் பலர் ஆங்கிலக் கல்வியை விரும்புவதைக் கணக்கில் கொண்டு, அவர், தாமஸ் பாபிங்டன் மெக்காலேயை அன்றிருந்த கல்விக் குழுவின் தலைவராக நியமித்துக் கல்விக்கான ஒரு வரைவுக் கொள்கையினைத் தயாரித்து வழங்கும்படிக் கோரினார்.

✶ மெக்காலே 1835 ஆம் ஆண்டு தனது புகழ்பெற்ற கல்விக்கான வரைவுக் கொள்கையைத் தயாரித்தார்.

✶ இந்த வரைவுக் கொள்கையின்படி அரசாங்கத்தின் கல்விக் கொள்கையின் நோக்கம் "இந்தியாவின் பூர்வீக மக்களிடையே ஐரோப்பிய இலக்கியத்தையும் அறிவியலையும் மேம்படுத்துவது" ஆகும்.

✶ இதனைக் கற்பிக்க ஆங்கில மொழியினைப் பயன்படுத்த வேண்டும் எனவும் மெக்காலே அறிவுறுத்தினார்.

**3. விடுதலைக்குப் பிறகு இந்திய அரசால் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை ?**

**விடை :**

✶ நாட்டில் பெருமளவு புறக்கணிக்கப்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டது.

✶ மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலங்கள் முடிவதற்குள் ஐந்து ஐஐடி–கள், பல்வேறு சிறப்புமிக்க ஆராய்ச்சிப் பிரிவுகளில் 17 தேசிய ஆய்வகங்கள், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (சிஎஸ்ஐஆர்), பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ), அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை நிறுவப்பட்டன.

✶ அதன்பின் 1983 இல் ஆசிரியர் கல்விக்காக டி.பி. சட்டோபாத்யாயா குழு, 1986 இன் தேசிய கல்விக் கொள்கை ஆணையம், 1990 இல் அமைக்கப்பட்ட ஆச்சார்யா ராமமூர்த்தி மீளாய்வுக்குழு, யஷ்பால் குழு 1993, டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் ஆணையம் (2015) ஆகியவை மாறிவரும் காலத்திற்கேற்ப பாடத்திட்டத்தில் மாற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டன. அவை கல்வி மேம்பாட்டிற்காகப் பல பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

**4. கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமானப் பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டுக.**

**விடை :**

✶ 10 + 2 + 3 கல்வி முறை

✶ இடைநிலைக் கல்வியை தொழில் கல்வியாக்கல்.

✶ பொதுப்பள்ளிக் கல்விமுறையில் செயல்படும் பள்ளிகளில் 5ஆம் வகுப்பு வரை மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் கற்கலாம்.

✶ 6–14 வயதுள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி.

✶ மத்திய அரசு தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் ஆறு விழுக்காட்டினையாவது கல்வித்துறையில் முதலீடு செய்ய வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**VIII. உயர் சிந்தனை வினா**

**1. பிரிட்டிஷ் இந்தியாவில் நவீன கல்வி வளர்ச்சியில் கிறித்தவ மறைக் குழுவினரின் பங்கினை மதிப்பிடுக.**

**விடை :**

✶ கல்விக்கு கிறித்தவ மறை குழுக்களின் பங்களிப்புப் பாராட்டத்தக்கது. பாப்டிஸ்ட் சமயப் பரப்பாளர்கள் 1800 இல் செராம்பூரில் ஓர் வங்கத் தொடக்கப்பள்ளியைத் தொடங்கி நாற்பது மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தனர்.

✶ இதனைத் தொடர்ந்து வங்காள மாகாணத்தில் இலண்டன் சமயப் பரப்பாளர் சங்கம் பள்ளிகள் பலவற்றை நிறுவியது.

✶ மிஸ் மேரி ஆன் குக் என்பார் 1821 இல் இந்தியாவிற்கு வந்தபோது கல்கத்தாவிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் சராசரியாக 25 முதல் 30 மாணவியர் வரை பயிலக்கூடிய பெண்களுக்கான 23 பள்ளிகளை நிறுவினார்.

✶ ஜான் எலியட் டிரிங்க்வாட்டர் பெத்துன் என்பவரால் கல்கத்தாவில் நிறுவப்பட்ட பெத்துன் பள்ளி (1849) அவரது மரணத்திற்குப் பிறகு இப்பள்ளி அரசாங்கத்தால் ஏற்று நடத்தப்பட்டது. பின்னர் இது 1879 இல் பெண்களுக்கான முதல் உயர்கல்வி அளிக்கும் நிறுவனமாக மாறியது.

✶ போர்வீரர்களின் பெண் குழந்தைகளுக்குக் கல்வி வழங்கும் நோக்கத்துடன் அமெரிக்கர் சங்கம் 1824 இல் பெண்களுக்கானப் பள்ளியை நிறுவியது. 1829–30 களில் டாக்டர் வில்சன் என்பாரும் மேடம் வில்சனும் பம்பாயில் பெண்களுக்கென ஆறு பள்ளிகளைத் திறந்தனர்.

✶ சென்னையில் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ரெவரென்ட் லாரி, ரெவரென்ட் போவி என்ற இரண்டு மதகுருமார்கள், 1835 ஆம் ஆண்டு எழும்பூர் செயின்ட் ஆண்ட்ரூஸ் தேவாலயத்திற்கு அருகில் ஒரு பள்ளியைத் தொடங்கினர்.

✶ திருச்சிராப்பள்ளியில் 1838 ஆம் ஆண்டு புனித சிலுவை சகோதரிகள் செயின்ட் ஜோசப் (புனித சூசையப்பர்) ஆங்கிலோ–இந்தியன் பள்ளியை நிறுவினர். 1844 ஆம் ஆண்டு ஜெசூட்கள் (இயேசு சூசையப்பர்) கல்லூரியை நிறுவினர்.

✶ திருநெல்வேலியில் கிறிஸ்டியன் மிஷன் சொசைட்டி 1844 ஆம் ஆண்டு ஒரு பள்ளியைத் தொடங்கியது. அது 1876 ஆம் ஆண்டில் ஒரு கல்லூரியாக (அப்போது C.M.S.கல்லூரி, தற்போது புனித யோவான் கல்லூரி) தரம் உயர்த்தப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



IX. மாணவர் செயல்பாடு.

X. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. நாளந்தா | 2. திருச்சிராப்பள்ளி | 3. மதுரை | 4. காஞ்சிபுரம் |
| 5. விக்கிரமசீலா | 6. டெல்லி | 7. வாரணாசி | 8. பம்பாய் |
| 9. கல்கத்தா | 10. சென்னை | | |

விடை :




8 சமூ – 3

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சமணர்களின் சமய இலக்கியங்களில் இருந்த மொழிகள்.........................

**விடை : அர்த்த – மகதி மற்றும் பாலி**

2. 10 + 2 + 3 கல்வி முறையை பரிந்துரைத்தது .............. ஆணையம்.

**விடை : கோத்தாரி**

3. சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்கள் ............

**விடை : ஆதிமந்தியார், ஔவையார்**

4. நபியின் போதனைகள் ...........எனப்பட்டது.

**விடை : ஹதீஸ்**

5. விக்ரமசீலா பல்கலைக்கழகத்தை தொடங்கியவர் ..............

**விடை : அரசர் தர்மபாலர்**

---

## அலகு – 6. இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. பின்வருவனவற்றில் மக்களின் எந்த செயல்பாடுகள் கைவினைகளில் சாராதவை ?**

அ. கல்லிலிருந்து சிலையை செதுக்குதல் ஆ. கண்ணாடி வளையல் உருவாக்குதல்
இ. பட்டு சேலை நெய்தல் ஈ. இரும்பை உருக்குதல்

**விடை : ஈ) இரும்பை உருக்குதல்**

**2. ........................தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.**

அ. நெசவு ஆ. எஃகு
இ. மின்சக்தி ஈ. உரங்கள் **விடை : அ) நெசவு**

**3. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம்..................**

அ. பம்பாய் ஆ. அகமதாபாத்
இ. கான்பூர் ஈ. டாக்கா **விடை : இ) கான்பூர்**

**4. இந்தியாவின் முதல், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன ?**

அ. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
ஆ. எழுத்தறிவின்மையைக் குறைத்தல்
இ. வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்
ஈ. பெண்களுக்கு அதிகாரமளித்தல்

**விடை : இ) வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்**

**5. இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது ?**

அ. ஆட்சியாளர்களின் ஆதரவின்மை
ஆ. இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி
இ. இந்தியாவின் தொழிற்துறை கொள்கை
ஈ. பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை **விடை : இ. இந்தியாவின் தொழிற்துறை கொள்கை**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1...................இந்திய மக்களின் வாழ்க்கையில் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.

**விடை : கைவினைப் பொருட்கள்**

2. தொழிற்புரட்சி நடைபெற்ற இடம்............ **விடை : இங்கிலாந்து**

3. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு.............. **விடை : 1839**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# புவியியல்

## அலகு 1. பாறை மற்றும் மண்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக் கோளம் என அழைக்கப்படுகிறது.**

அ) வளிமண்டலம் ஆ) உயிர்க்கோளம்
இ) நிலக்கோளம் ஈ) நீர்க்கோளம்

**விடை : இ) நிலக்கோளம்**

**2. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்**

அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12
இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5

**விடை : ஈ) டிசம்பர் 5**

**3. உயிரினப் படிமங்கள்..................பாறைகளில் காணப்படுகின்றன.**

அ) படிவுப் பாறைகள் ஆ) தீப்பாறைகள்
இ) உருமாறியப் பாறைகள் ஈ) அடியாழப் பாறைகள்

**விடை : அ) படிவுப் பாறைகள்**

**4. மண்ணின் மேல் நிலை அடுக்கு**

அ) கரிம மண் அடுக்கு ஆ) அடி மண் அடுக்கு
இ) அடி மண் ஈ) அடித்தள பாறை

**விடை : அ) கரிம மண் அடுக்கு**

**5. பருத்தி வளர ஏற்ற மண்**

அ) செம்மண் ஆ) கரிசல் மண்
இ) வண்டல் மண் ஈ) மலை மண் **விடை : ஆ) கரிசல் மண்**

**6. மண்ணின் முக்கிய கூறு.**

அ) பாறைகள் ஆ) கனிமங்கள்
இ) நீர் ஈ) இவை அனைத்தும்

**விடை : ஆ) கனிமங்கள்**

**7. கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது ?**

அ) வண்டல் மண் ஆ) கரிசல் மண்
இ) செம்மண் ஈ) மலை மண் **விடை : அ)வண்டல் மண்**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு ...................... **விடை : பாறையியல்**
2. ..............மண் தினைப்பயிர்கள் விளைவிப்பதற்கு ஏற்றதாகும். **விடை : செம்மண்**
3. "புவியின் தோல்" என்று .............அழைக்கப்படுகிறது. **விடை : மண்**
4. உருமாறிய பாறைகளின் ஒரு வகையான ................பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது. **விடை : வெள்ளை பளிங்கு**
5. ................பாறை 'முதன்மை பாறை' என்று அழைக்கப்படுகிறது. **விடை : தீப்பாறைகள்**

---

**III. சரியா / தவறா எனக்குறிப்பிடுக.**

1. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது **விடை : சரி**
2. களிமண் பாறையிலிருந்து பலகைக்கல் (Slate) உருவாகிறது. **விடை : தவறு**
3. செம்மண் சுவருதல் (Leaching) செயல்முறைகளில் உருவாகிறது. **விடை : தவறு**
4. இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு " செயற்கை மணல் " (M-Sand) பயன்படுகிறது . **விடை : சரி**
5. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன. **விடை : தவறு**

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



IV. பொருத்துக.

1.

| | | |
|---|---|---|
| i) கிரானைட் | – | 1. அடிப்பாறை |
| ii) மண் அடுக்கு | – | 2. அடியாழப் பாறைகள் |
| iii) பாரன் தீவு | – | 3. பட்டைப் பயிரிடல் வேளாண்மை |
| iv) மண் வளப்பாதுகாப்பு | – | 4. செயல்படும் எரிமலை |

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 4 | 3 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| விடை : அ) | 2 | 1 | 4 | 3 |

2.

| | | |
|---|---|---|
| i) பசால்ட் (கருங்கல்) | – | 1. ஆந்த்ரசைட் |
| ii) சுண்ணாம்புப் பாறை | – | 2. வெளிப்புற தீப்பாறைகள் |
| iii) நிலக்கரி | – | 3. உருமாறியப் பாறைகள் |
| iv) ஜெனிஸ் (நைஸ்) | – | 4. படிவுப்பாறைகள் |

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 1 | 3 |
| ஆ) | 2 | 4 | 1 | 3 |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 3 | 1 | 4 | 2 |

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| விடை : அ) | 2 | 4 | 1 | 3 |

**V. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க.**

1. அ) தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.
ஆ) பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகிறது.
இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.
ஈ) தக்காண பீடபூமி பகுதிகள் தீப்பாறைகளால் உருவானவை.

**விடை : இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.**

2. அ) மண்ணரிப்பு மண் வளத்தை குறைக்கிறது.
ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.
இ) மண் ஒரு புதுப்பிக்கக் கூடிய வளம்.
ஈ) இலைமக்குகள் மேல் மட்ட மண்ணின் ஒரு பகுதியாகும்.

**விடை : ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.**

**VI. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்றைக் கண்டுபிடித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**கூற்று –1** படிவுப் பாறைகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்டவை.
**கூற்று –2** படிவுப் பாறைகள் பல்வேறு காலங்களில் உருவானவை.

அ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம்.
ஆ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று 1 சரி ஆனால் கூற்று 2 தவறு.
ஈ) கூற்று 2 சரி ஆனால் கூற்று 1 தவறு.

**விடை : அ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம்.**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**VII. காரணம் கூறுக.**

**1. நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.**

**விடை :**

✶ பாறைகளில் உள்ள கனிமங்கள் நீரில் கரைந்து, இரசாயன கலவையாக மாறுகிறது.

✶ இவை ஆவியாதல் மூலமாக நீர்த்தேக்கப் படுகைகளில் படிவதால் அங்கு இரசாயனப் படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.

**2. தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.**

**விடை :**

✶ புவியின் ஆழமான பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு உறைந்து தீப்பாறைகள் உருவாவதால் அவை எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.

**VIII. வேறுபடுத்துக.**

**1. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்**

**விடை :**

| வ.எண். | உருமாறிய பாறைகள் | படிவுப் பாறைகள் |
|---|---|---|
| 1. | அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப் பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகளாக மாறுகிறது. | காற்று, நீர், பனியாறுகள் போன்ற அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவுப் பாறைகள் உருவாகின்றன. |
| 2. | வெப்ப உருமாற்றம், இயக்க உருமாற்றம் என்ற செயல்கள் மூலம் உருவாகின்றன. | உயிரினப் படிவுப் பாறைகள், பௌதீக படிவுப் பாறைகள், இரசாயன படிவுப் பாறைகள் போன்ற காரணங்களால் உருவாகின்றன. |

**2. மண் வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு**

**விடை :**

| வ.எண். | மண்வள பாதுகாப்பு | மண்ணரிப்பு |
|---|---|---|
| 1. | மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல்முறையாகும். | இயற்கை காரணிகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் மண்ணின் மேலடுக்கு நீக்கப்படுதல் அல்லது அரிக்கப்படுதல் ஆகும். |
| 2. | காடுகள் வளர்த்தல், மேய்ச்சலை கட்டுப்படுத்துதல், அணைகளைக் கட்டுதல், பயிற்சுழற்சி முறை மூலம் மண் வளத்தை பாதுகாக்கலாம். | ஓடும் நீர், காற்று மண்ணரிப்பிற்கு முக்கிய காரணியாக உள்ளன. |

**IX. சுருக்கமாக விடையளி.**

**1. தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன ?**

**விடை :**

✶ தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு உறைந்து உருவாகின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. பாறைகளின் கூட்டமைப்பு பற்றி விவரி ?**

**விடை : பாறைகளின் கூட்டமைப்பு :**

✶ பாறைகள் என்பது கனிமங்கள் தனித்த கூறுகளாகவோ அல்லது கூட்டுக் கலவையாகவோ உருவாகலாம்.

**3. "பாறைகள்" வரையறு .**

**விடை :**

✶ பாறை என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கனிமங்களின் கலவை ஆகும்.

**4. மண்ணின் வகைகளைக் கூறுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| 1) வண்டல் மண் | 2) கரிசல் மண் | 3) செம்மண் |
| 4) சரளை மண் | 5) மலை மண் | 6) பாலை மண் |

**5. மண்வளப் பாதுகாப்பு என்றால் என்ன ?**

**விடை :**

✶ மண்வளப்பாதுகாப்பு என்பது மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல்முறையாகும்.

**X. விரிவான விடையளி.**

**1. மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி.**

**விடை :**

✶ மண் என்பது பல்வகை கரிமப்பொருள்கள், கனிமங்கள், வாயுக்கள், திரவப் பொருள்கள் மற்றும் பல உயிரினங்கள் கலந்த கலவையாகும்.

✶ மண்ணில் உள்ள கனிமங்கள் மண்ணை உருவாக்கும் ஒரு அடிப்படை காரணியாகும்.

✶ பாறைகள் வானிலை சிதைவு மற்றும் அரித்தல் செயல்முறைகளுக்கு உட்படுத்தபடும்பொழுது மண்ணாக உருவாகிறது.

✶ நீர், காற்று, வெப்ப நிலைமாறுபாடு, புவி ஈர்ப்பு விசை, வேதிபரிமாற்றம், உயிரினங்கள் மற்றும் அழுத்த வேறுபாடுகளால் தாய்ப்பாறைகள் உடைபட்டு மிருதுவான துகள்களாக மாறுகிறது.

**2. பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்.**

**விடை : பாறைகளின் வகைபாடுகள் :**

✶ புவி பரப்பில் காணப்படும் பாறைகளை, அவை தோன்றும் முறைகளின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1) தீப்பாறைகள்
2) படிவுப் பாறைகள்
3) உருமாறியப் பாறைகள் அல்லது மாற்றுருப் பாறைகள்

**1) தீப்பாறைகள் :**

✶ தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு உறைந்து உருவாகின்றன.

✶ இப்பாறைகளிலிருந்து மற்ற பாறைகள் உருவாகின்றதால் இவற்றை முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்று அழைக்கின்றோம்.

**தீப்பாறைகளின் வகைகள் :**

(i) வெளிப்புறத் தீப்பாறைகள்
(ii) ஊடுருவிய தீப்பாறைகள்

**2) படிவுப் பாறைகள் :**

✶ காற்று, நீர், பனியாறுகள் போன்ற அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவுப் பாறைகள் உருவாகின்றன.

✶ இவைகள் அடுக்குப்பாறைகள் என அழைக்கப்படுகின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**படிவுப் பாறைகளின் வகைகள் :**
(i) உயிரின படிவுப் பாறைகள்
(ii) பௌதீக படிவுப் பாறைகள்
(iii) இரசாயன படிவுப் பாறைகள்

**3) உருமாறிய பாறைகள்**

✶ அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப் பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது.

**உருமாறிய பாறைகளின் வகைகள் :**
(i) வெப்ப உருமாற்றம்
(ii) இயக்க உருமாற்றம்

**3. மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.**
**விடை :**

**மண்ணின் அடுக்கு**

| | |
|---|---|
| O- இலை மக்கு அடுக்கு | இலைகள், சருகுகள், கிளைகள், பாசிகள் போன்ற கரிமப் பொருட்களால் உருவானவை. |
| A - மேல்மட்ட அடுக்கு | கரிம மற்றும் கனிமப் பொருட்களால் ஆன அடுக்கு |
| E - உயர்மட்ட அடுக்கு | அதிக அளவு சுவர்தலுக்கு உட்பட்ட அடுக்கு. களிமண், இரும்பு மற்றும் அலுமினிய ஆக்ஸைடு போன்ற தாதுக்கள் இவ்வடுக்கில் கணிசமாக காணப்படுகின்றன. |
| B - அடி மண் | இவ்வடுக்கு தாய்ப்பாறையின் இரசாயன, (அ) பௌதீக மாற்றத்திற்கு உட்பட்டவை. இரும்பு, களிமண், அலுமனிய ஆக்ஸைடு மற்றும் கனிமப் பொருட்களால் தோன்றிய அடுக்கு அல்லது திரள் மண்டலம் என அழைக்கப்படுகிறது. |
| C- தாய்பாறை அடுக்கு | இவ்வடுக்கில் தாய்ப்பாறைகள் குறைந்த அளவே சிதைக்கப்படுகின்றன. |
| R - சிதைவடையாத தாய்ப்பாறை | இவ்வடுக்கு சிதைவடையாத அடிமட்ட பாறையாகும். |

**4. மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.**
**விடை : மண்ணின் வகைபாடு :**

மண் உருவாகும் விதத்தில் அவற்றின் நிறம் பௌதீக மற்றும் இரசாயன பண்புகளின் அடிப்படையில் ஆறு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

அவைகள் பின்வருமாறு,
1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. செம்மண்
4. சரளை மண்
5. மலை மண்
6. பாலை மண்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**1. வண்டல் மண் :**

✶ வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள், வெள்ளச் சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது.

✶ இவை ஓடும் நீரின் மூலம் கடத்தப்படும் நுண்ணிய துகள்களால் படிய வைக்கப்பட்டு உருவாகிறது.

✶ இது மற்ற மண் வகைகளைக் காட்டிலும் வளம்மிக்கது.

✶ இது நெல், கரும்பு, கோதுமை, சணல் மற்றும் மற்ற உணவுப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

**2. கரிசல் மண் :**

✶ கரிசல் மண், தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.

✶ கரிசல் மண் இயற்கையிலேயே களிமண் தன்மையையும், ஈரப்பதத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் திறன் கொண்டது.

✶ கரிசல் மண்ணில் பருத்திப் பயிர் நன்கு வளரும்.

**3. செம்மண் :**

✶ செம்மண், உருமாறியப் பாறைகள் மற்றும் படிகப் பாறைகள் ஆகியவை சிதைவடைவதால் உருவாகிறது.

✶ இம்மண்ணில் உள்ள இரும்பு ஆக்சைடு அளவைப் பொருத்து மண்ணின் நிறமானது பழுப்பு முதல் சிகப்பு நிறம் வரை வேறுபடுகிறது.

✶ இம்மண் பொதுவாக அரை வறண்ட பிரதேசங்களில் காணப்படுகிறது.

✶ இது வளம் குறைந்த மண்ணாக இருப்பதால் தினைப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

**4. சரளை மண் :**

✶ சரளை மண் அயனமண்டல பிரதேச காலநிலையில் உருவாகிறது.

✶ இம்மண் அதிக வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு கொண்ட பகுதிகளில் ஊடுருதலின் செயலாக்கத்தினால் உருவாவதால் இம்மண் வளம் குறைந்து காணப்படுகிறது.

✶ இது தேயிலை, காப்பி போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

**5. மலை மண் :**

✶ மலை மண், மலைச்சரிவுகளில் காணப்படுகிறது.

✶ இப்பகுதிகளில் கார தன்மையுடன் குறைந்த பருமன் கொண்ட அடுக்காக உள்ளது.

✶ உயரத்திற்கு ஏற்றவாறு இம்மண்ணின் பண்புகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன.

**6. பாலை மண் :**

✶ பாலை மண் அயன மண்டல பாலைவனப் பிரதேசங்களில் காணப்படுகிறது.

✶ இது உவர்தன்மை, மற்றும் நுண்துளைகளைக் கொண்டது.

✶ வளம் குறைந்த இம்மண்ணில் வேளாண்மையை மேற்கொள்ள இயலாது.

**XI. செயல்பாடுகள்**

**1. இணையதள உதவியுடன் கீழ்க்கண்ட அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.**

**விடை :**

| பாறைகள் | உருவாகும் விதம் | பண்புகள் | எ.கா | பயன்கள் |
|---|---|---|---|---|
| தீப்பாறைகள் | எரிமலை | கடினத்தன்மை உடையவை | கிரானைட் | கட்டடப்பொருள்கள் |
| படிவுப்பாறைகள் | படியவைத்தல் | பல அடுக்குகளைக் கொண்டது | ஜிப்சம் | சுண்ண எழுதுகோல் |
| உருமாறியப் பாறைகள் | வடிவம் மாறுதல் | படிகத் தன்மை கொண்டவை | பளிங்கு கற்கள் | அலங்காரப் பொருள்கள் |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. வரைபடப் பயிற்சி இந்திய புறவெளி நிலவரைபடத்தில் கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.**

**விடை :**




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்– விடை கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பாறையியல் என்ற சொல் .................மொழியிலிருந்து பெறப்பட்டது. **விடை : கிரேக்க**
2. இக்னியஸ் என்ற சொல் ..................மொழியிலிருந்து பெறப்பட்டது. **விடை : இலத்தீன்**
3. இக்னியஸ் என்றால் ...........என்று பொருள்படும். **விடை : தீ**
4. தீப்பாறைகள் ................வேலைகளுக்குப் பயன்படுகின்றன. **விடை : கட்டுமான**
5. ஊடுருவிய தீப்பாறைகள் பெரிய அளவிலான படிகங்களைக் கொண்டிருப்பதால் இவைகள்............என்றும் அழைக்கப்படுகிறது. **விடை : படிகப் பாறைகள்**
6. ........................படிகங்களற்ற பாறைகளாக உள்ளது. **விடை : படிவுப்பாறைகள்**
7. உருமாறிய பாறைகள்.............தன்மை கொண்டவை. **விடை : படிக**

## அலகு 2. வானிலை மற்றும் காலநிலை

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. புவியின் வளிமண்டலம்.........................நைட்ரஜன் மற்றும் ................ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது.**

அ) 78 % மற்றும் 21 % ஆ) 22 % மற்றும் 1 %
இ) 21 % மற்றும் 0.97 % ஈ) 10 மற்றும் 20 % **விடை : அ) 78 % மற்றும் 21 %**

**2. .....................ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.**

அ) புவி ஆ) வளிமண்டலம்
இ) காலநிலை ஈ) சூரியன் **விடை : இ) காலநிலை**

**3. புவி பெறும் ஆற்றல்.......................**

அ) நீரோட்டம் ஆ) மின்காந்த அலைகள்
இ) அலைகள் ஈ) வெப்பம் **விடை : ஈ) வெப்பம்**

**4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.**

அ) சமவெப்பக்கோடு ஆ) சம சூரிய வெளிச்சக் கோடு
இ) சம காற்றழுத்தக் கோடு ஈ) சம மழையளவுக் கோடு
**விடை : ஈ) சம மழையளவுக் கோடு**

**5. ............என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.**

அ) காற்றுமானி ஆ) அழுத்த மானி
இ) ஈரநிலை மானி ஈ) வெப்ப மானி **விடை : இ) ஈரநிலை மானி**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1................என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும். **விடை : வானிலை**

2. வானிலையைப் பற்றிய அறிவியல் ஆய்வு.................... **விடை : வளியியல்**

3. புவியில் அதிகபட்ச வெப்பம் பதிவான இடம்............... **விடை : கிரீன்லாந்து**

4. காற்றில் உள்ள அதிக பட்ச நீராவிக் கொள்ளளவுக்கும் உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம்............ **விடை : ஒப்பு ஈரப்பதம்**

5. அனிமாமீட்டர் மற்றும் காற்றுமானி மூலம் ................மற்றும்.............ஆகியவை அளக்கப்படுகின்றன. **விடை : காற்றின் வேகம், காற்றின் திசை**

6. சம அளவுள்ள வெப்ப நிலையை இணைக்கும் கற்பனைக் கோடு............... **விடை : சமவெப்பக்கோடு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ...............என்பது வானிலையின் அறிவியல் பிரிவாகும். **விடை : வளியியல்**
2. ...................என்பது காலநிலையின் அறிவியல் பிரிவாகும். **விடை : காலநிலையியல்**
3. சூரிய கதிர்வீச்சுகளிலிருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் ................. .................... மற்றும்.................... ஆகிய வழிகளில் புவியை வந்தடைகிறது. **விடை : வெப்ப கதிர்வீச்சு, வெப்பக் கடத்தல், வெப்பச்சலனம்**
4. ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள சராசரியே ..................ஆகும். **விடை : வெப்பநிலை வீச்சு**
5. ஒரு நாளில் அமையும் உச்ச வெப்பநிலைக்கும் மற்றும் நீச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு...............எனப்படும். **விடை : தினசரி வெப்பநிலை வீச்சு**
6. ஒரு ஆண்டின் அதிக வெப்பமான சராசரி மாதத்திற்கும் குறைந்த வெப்பமான சராசரி மாதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டிற்கு ...............என்று பெயர். **விடை : ஆண்டு வெப்பவியாப்தி**
7. சம அளவு வெப்பநிலைக் கொண்ட இடங்களை இணைத்து வரையப்படும் கற்பனைக் கோடுகள்................ஆகும். **விடை : சமவெப்பக் கோடுகள்**
8. ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் காற்றில் உள்ள நீராவியின் அளவு ...............என அழைக்கப்படுகிறது. **விடை : ஈரப்பதம்.**

---

# அலகு 3. நீரியல் சுழற்சி

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு...............என்று பெயர்.**

அ) ஆற்றின் சுழற்சி ஆ) நீரின் சுழற்சி
இ) பாறைச் சுழற்சி ஈ) வாழ்க்கைச் சுழற்சி **விடை : ஆ) நீரின் சுழற்சி**

**2. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம்...............**

அ) 71% ஆ) 97% இ) 2.8% ஈ) 0.6% **விடை : இ) 2.8 %**

**3. நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு.................என்று பெயர்.**

அ) நீர் திரவமாய் சுருங்குதல் ஆ) ஆவியாதல்
இ) பதங்கமாதல் ஈ) மழை **விடை : ஈ) மழை**

**4. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு............**

அ) நீர் திரவமாய் சுருங்குதல் ஆ) ஆவியாதல்
இ) நீர் உட்கசிந்து வெளியிடுதல் ஈ) நீர் வழிந்தோடல் **விடை : ஈ) நீர் வழிந்தோடல்**

**5. நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு...............என்று அழைக்கின்றனர்.**

அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல் ஆ) நீர் சுருங்குதல்
இ) நீராவி சுருங்குதல் ஈ) மழைப் பொழிவு
**விடை : அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்**

**6. குடிப்பதற்கு உகந்த நீரை................என்று அழைப்பர்.**

அ) நிலத்தடி நீர் ஆ) மேற்பரப்பு நீர்
இ) நன்னீர் ஈ) ஆர்ட்டீசியன் நீர்
**விடை : இ) நன்னீர்**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு.............என்று அழைக்கப்படுகிறது.
**விடை : ஈரப்பதம்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**VIII. விரிவான விடையளி :**

**1. நீர்ச் சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி.**

**விடை :**

✶ நீரியல் சுழற்சியில் ஆறு படிநிலைகள் காணப்படுகின்றன. அவை

**1) ஆவியீர்ப்பு 2) திரவமாய் சுருங்குதல் 3) பொழிவு 4) நீர் ஊடுருவல்**
**5) உட்கசிதல் 6) நீர் வழிந்தோடல்**




நீரியல் சுழற்சி

**1) ஆவியீர்ப்பு :**

✶ ஆவியீர்ப்பு என்பது புவியின் மேற்பரப்பு நீர் நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமாகவும் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பாகும்.

**2) திரவமாய் சுருங்குதல் :**

✶ நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு நீர் சுருங்குதல் என்று பெயர்.

✶ வளிமண்டலத்தில் வெப்பக்காற்று மேலே எழுந்து, குளிர்வடைந்து நீராவியைத் தக்கவைத்துக் கொள்ளும் திறனை இழக்கும் பொழுது, நீர் சுருங்குதல் நிகழ்வு நடைபெறுகிறது.

**3) மழைப் பொழிவு :**

✶ மழைப்பொழிவு என்பது மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.

**4) நீர் ஊடுருவல்:**

✶ புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர்ப்புகுவதற்கு நீர் ஊடுருவல் என்று பெயர்.

**5) நீர் உட்கசிதல் :**

✶ நீர் உட்கசிவு என்பது மண்ணடுக்கு மற்றும் பாறை அடுக்குகளின் வாயிலாக ஊடுருவிய நீர் கீழ்நோக்கி நிலத்திற்கு அடியில் செல்வதாகும்.

**6) நீர் வழிந்தோடல் :**

✶ நீர் வழிந்தோடல் என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. தாவரங்களின் நீர் உட்கசிந்து வெளியேறுதலுக்கும் ஆவியாதலுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.**

**விடை :**

| வ.எண் | நீர் உட்கசிந்து வெளியிடுதல் | நீர் ஆவியாதல் |
|---|---|---|
| 1. | தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயல் ஆகும். | நீர், திரவநிலையிலிருந்து வாயுநிலைக்கு மாறும் நிலை ஆகும். |
| 2. | வெப்பநிலை, காற்று, ஈரப்பதம் ஆகியவை நீர் உட்கசிந்து வெளியாகும் விதத்தை நிர்ணயிக்கின்றன. | ஆவியாதலின் விகிதத்தை பாதிக்கும் முக்கிய காரணியாக வெப்ப நிலை உள்ளது. |
| 3. | 10 % ஈரப்பதம் தாவரங்களில், நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமாக வளிமண்டலத்திற்குச் செல்கிறது. | 90 % ஈரப்பதம் ஆவியாதல் மூலமாக வளிமண்டலத்திற்குச் செல்கிறது. |
| 4. | தாவரங்களில் நடைபெறும் செயல்முறை ஆகும். | புவி மேற்பரப்பில் நடைபெறும் செயல்முறை ஆகும். |
| 5. | விவசாயத்தில், பயிர்களின் தன்மை, பயிர்களின் பண்புகள், அதன் சூழல் மற்றும் பயிர் சாகுபடி முறைகள் நீர் உட்கசிந்து வெளியேறும் செயலைத் தீர்மானிக்கின்றன. | காற்று அதிகம் உள்ள காலங்களில் வறண்ட காற்று நீராவியை வெளியேற்றி கூடுதல் ஆவியாதலுக்கு வழிவகுக்கிறது. |

**3. மழைபொழிவின் பல வடிவங்களைப் பற்றி விவரி.**

**விடை :**

**அ) மழைப்பொழிவு :**

✶ மழைப்பொழிவு என்பது மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.

**ஆ) மழைப்பொழிவின் வடிவங்கள் :**

✶ பொழிவின் வடிவம் ஓரிடத்தில் நிலவும் வானிலை அல்லது காலநிலையைச் சார்ந்தே அமைகிறது.

✶ பொழிவின் வகைகளை மழை, கல்மழை, உறைபனி மழை, ஆலங்கட்டி மழை மற்றும் பனி என வகைப்படுத்தலாம்.

**மழை :**

✶ மழைப்பொழிவு நீர்த்துளிகளின் வடிவத்தில், உள்ளதால் மழை எனப்படுகிறது.

✶ நீர்த்துளிகள் 0.5 மி.மீ விட்டத்திற்கு அதிகமாக இருந்தால் மழைப் பொழிவு எனவும் 0.5 மி.மீட்டருக்கு குறைவாக இருந்தால் அதைத் தூறல் எனவும் அழைக்கப்படுகிறது.

**கல்மழை :**

✶ நீர்த்துளிகளும், 5 மி.மீ விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு கல்மழை என்று பெயர்.

✶ சிலநேரங்களில் வளிமண்டல வெப்பநிலை $0^{\circ}C$ க்கும் குறைவாக இருக்கும் அடுக்குகளில் மழைத்துளி விழும் பொழுது நீர் உறைநிலைக்குச் சென்றுவிடுகிறது.

✶ அது புவியை நோக்கி வரும் பொழுது பனிக்கட்டிகளாக மாறுகிறது.

✶ ஆதலால், பனிக்கட்டிகளும், நீர்த்துளிகளும் சேர்ந்து புவியின் மீது கல்மழையாக பொழிகிறது.

**உறைபனி மழை :**

✶ மழைத்துளிகள், சில நேரங்களில் புவிப்பரப்பிற்கு அருகாமையில் குளிர்ந்த காற்றுவழியாக விழும் பொழுது உறைவதில்லை.

✶ மாறாக குளிர்ந்த புவிப்பரப்பைத் தொடும்பொழுது, அம்மழைத்துளிகள் உறைந்து விடுகின்றன.


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**IX. செயல்பாடு :**

படத்தில் உள்ள விடுபட்ட நீரின் சுழற்சிகளைக் கண்டுபிடித்து அதற்குரிய இடத்தில் எழுதவும்.




**விடைகள் :**




**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. புவியில் உள்ள நீரின் அளவு...........மில்லியன் கனமைல்கள் **விடை : 326**
2. ...............என்பது புவியின் மேற்பரப்பில் உள்ள நீரின் பல்வேறு அம்சங்களைக் கையாளும் அறிவியலாகும். **விடை : நீரியல்**
3. நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு ...............என்று பெயர். **விடை : நீர் சுருங்குதல்**
4. நீர் சுருங்குதல் என்பது நீராவி காற்றில் செறிந்து ....................அடைவது. **விடை : பூரித நிலையை**


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**VII. செயல்பாடுகள் : தமிழ்நாடு வரைபடத்தில் 14 கடற்கரை மாவட்டங்களை வெவ்வேறு வண்ணங்களில் தீட்டவும்.**

**விடை :**




## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஹசார்டு என்ற சொல்.............மொழியில் இருந்து தோன்றியது.**

அ) பிரெஞ்சு ஆ) அரபு
இ) ஸ்பானிஷ் ஈ) ஜாப்பனிஸ் **விடை : அ) பிரெஞ்சு**

**2. விஷ தேனீக்கள்..................சார்ந்த இடராகும்**

அ) வளிமண்டலம் ஆ) உயிரியல்
இ) நீரியல் ஈ) மனித தூண்டுதல் **விடை : ஆ) உயிரியல்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. இந்தியாவின் எப்பகுதியும்.................இன் கீழ் வகைப்படுத்தப்படவில்லை**
அ) மண்டலம்–2 ஆ) மண்டலம் – 3
இ) மண்டலம் – 1 ஈ) மண்டலம் – 4 **விடை : இ) மண்டலம் – 1**

**4. அயன மண்டல சூறாவளிகளில் காற்றின் வேகம் மணிக்கு..................கிலோ மீட்டர் வரை வீசக்கூடும்.**
அ) 266 ஆ) 300
இ) 100 ஈ) 200 **விடை : ஈ) 200**

**5. கரிம சகதிகள்................கழிவுகள் ஆகும்**
அ) தீப்பற்றக் கூடிய ஆ) வெடி பொருட்கள்
இ) இரசாயனங்கள் ஈ) கதிரியக்க பொருட்கள் **விடை : அ) தீப்பற்றக் கூடிய**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :**
1. சுனாமி என்ற வார்த்தைக்கு ................என அர்த்தம் **விடை : துறைமுக அலை**
2. ..............என்பது உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டு அறிக்கை ஆகும். **விடை : ஜெர்மன் – வாட்ச்**
3. இந்தியாவில் சுமார்.................சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதிகளாகும். **விடை : 15%**

## அலகு –6. தொழிலகங்கள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. பட்டுநெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்................. பிரிவுகளின் கீழ் வருகின்றன.**
அ) சிறிய அளவிலான தொழிலகம் ஆ) பெரிய அளவிலான தொழிலகம்
இ) கடல் வளம் சார்ந்த தொழிலகம் ஈ) மூலதனம் சார்ந்த தொழிலகம்
**விடை : அ) சிறிய அளவிலான தொழிலகம்**

**2. உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள்.................... வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**
அ) 2 ஆ) 3
இ) 4 ஈ) 5 **விடை : இ) 4**

**3. அமுல் பால் பண்ணைத் தொழிலகம் .................... துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.**
அ) தனியார் துறை ஆ) பொதுத் துறை
இ) கூட்டுறவுத் துறை ஈ) கூட்டுத் துறை **விடை : இ) கூட்டுறவுத் துறை**

**4. இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் .................... தொழிலகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.**
அ) வேளாண் சார்ந்த ஆ) கனிம வளம் சார்ந்த
இ) வனப்பொருட்கள் சார்ந்த ஈ) கடல் வளம் சார்ந்த **விடை : ஆ) கனிம வளம் சார்ந்த**

**5. சார்புத் துறை ............... வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**
அ) 4 ஆ) 3
இ) 2 ஈ) 5 **விடை : இ) 2**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குடிமையியல்

## அலகு 1. மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார் ?**

அ) குடியரசுத் தலைவர் ஆ) துணைக் குடியரசுத் தலைவர்
இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர்

**விடை : அ) குடியரசுத் தலைவர்**

**2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்**

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்
இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர் **விடை : ஆ) முதலமைச்சர்**

**3. மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்**

அ) உள்துறை அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்
இ) சபாநாயகர் ஈ) ஆளுநர் **விடை : ஈ) ஆளுநர்**

**4. உயர் நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார் ?**

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்
இ) உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி ஈ) குடியரசுத் தலைவர்

**விடை : ஆ) முதலமைச்சர்**

**5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது**

அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58 **விடை : அ) 62**

**II.கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை..................ஆகும். **விடை : 29**
2. ஆளுநரின் பதவிக்காலம்..............ஆண்டுகள் ஆகும். **விடை : 5**
3. மாவட்ட நீதிபதிகள்......................ஆல் நியமிக்கப்படுகின்றனர். **விடை : ஆளுநர்**
4. ஆளுநர் ஒரு மாநிலத்தின்....................ஆவார். **விடை : நிர்வாகத் தலைவர்**
5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக ..................வயது நிறைவடைந்திருக்க வேண்டும். **விடை : 25**

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. ஆளுநர் | – | கீழவை |
| 2. முதலமைச்சர் | – | பெயரளவுத் தலைவர் |
| 3. சட்டமன்ற பேரவை | – | மேலவை |
| 4. சட்டமன்ற மேலவை | – | உண்மையான தலைவர் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. ஆளுநர்** | – | **பெயரளவுத் தலைவர்** |
| **2. முதலமைச்சர்** | – | **உண்மையான தலைவர்** |
| **3. சட்டமன்ற பேரவை** | – | **கீழவை** |
| **4. சட்டமன்ற மேலவை** | – | **மேலவை** |

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.**

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். **விடை : சரி**
2. ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார். **விடை : தவறு**
3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. **விடை : சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு**

**1. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.**

**i. குடியரசுத் தலைவர்**

**ii. துணை குடியரசுத் தலைவர்**

**iii. ராஜ்ய சபை உறுப்பினர்கள்**

**iv. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்**

அ) i, ii & iii சரி ஆ) i மற்றும் iii சரி

இ) i, iii மற்றும் iv சரி ஈ) i, ii, iii மற்றும் iv சரி **விடை : இ) i, iii மற்றும் iv சரி**

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.**

**விடை :**

1. மேலவை – சட்டமன்ற மேலவை
2. கீழவை – சட்டமன்ற பேரவை

**2. மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை ?**

**விடை :**

★ மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

**3. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார் ?**

**விடை :**

★ ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார்.

**4. மாநில அமைச்சரவை குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது ?**

**விடை :**

★ முதலமைச்சர் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சர்களை தேர்வு செய்கிறார்.

★ இவ்வாறு மாநில அமைச்சரவை குழு உருவாக்கப்படுகிறது.

**VII. விரிவான விடையளி.**

**1.முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி ?**

**விடை : முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

★ முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.

★ மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.

★ அமைச்சரவையை, உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

★ முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.

★ பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார்.

★ பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

★ மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

★ மாநில அரசின் கொள்கைகள் மக்களின் நலனுக்கு எதிராக இல்லாததை உறுதி செய்கிறார். ★ மாநில அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.

★ மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

★ முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. மாநில சட்ட மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி ?**

**விடை : மாநில சட்ட மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

★ மாநில சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அதன் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

★ மாநில சட்டமன்றம் ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை கூடும்.

★ மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கிய பணி ஆகும்.

★ சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக சட்டத்தை இயற்றலாம்.

★ எனினும் நெருக்கடி நிலை நடைமுறையில் உள்ளபோது சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாது.

★ மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது.

★ மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது.

★ அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம்.

★ மாநில சட்டமன்றம் மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது.

★ நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர இயலும்.

★ சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ, விலகிக் கொள்ளவோ இயலாது.

★ சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர்.

★ மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொள்கின்றனர்.

★ அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது.

★ எனவே அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீதியை உறுதி செய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளைக் கொண்டுள்ளது.

---

**3. உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் எழுது ?**

**விடை : உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

★ அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் ஆட்கொணர்வு நீதிப் பேராணை, தகுதி முறை வினவும் நீதிப்பேராணை, தடை உறுத்தும் நீதிப்பேராணை, கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப் பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.

★ ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார் நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

★ சார் நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ஒரு வழக்கில் அதில் சட்ட முகாந்திரம் உள்ளது என உயர் நீதிமன்றம் திருப்தியுறும் போது இவ்வழக்கினை எடுத்து தானே முடிவு செய்யலாம்.

★ உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார் நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.

★ உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.

★ நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

★ ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட நீதிமன்றத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும்.

★ மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

---

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

1. முதலமைச்சர்............யின் தலைவர் ஆவார். **விடை : அமைச்சரவை**
2. இந்தியாவில் மேலவை என்பது................ஆகும். **விடை : சட்டமன்ற மேலவை**
3. மாநில சட்ட மன்றத்தின் தலைமை அலுவலர்.............. **விடை : சபாநாயகர்**
4. மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள்.................. **விடை : சட்டமன்ற உறுப்பினர்கள்**
5. தமிழ்நாடு சட்டமன்றம்.................யில் அமைந்துள்ளது. **விடை : சென்னை**
6. சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம்...................... **விடை : ஆறு ஆண்டுகள்**

## அலகு 2. குடிமக்களும் குடியுரிமையும்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல ?**

அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்
இ) வம்சாவழியின் முலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

**விடை : ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்**

**2. அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன ?**

அ) பகுதி II ஆ) பகுதி II பிரிவு 5 –11
இ) பகுதி II பிரிவு 5 –11 ஈ) பகுதி I பிரிவு 5 –11

**விடை : ஆ) பகுதி II பிரிவு 5 –11**

**3. இந்தியாவின் முதல் குடிமகன் யார் ?**

அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி

**விடை : ஆ) குடியரசுத் தவைலர்**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஒரு நாட்டின் ...................அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடைவர் ஆவார். **விடை : குடிமக்கள்**
2. இந்திய அரசியலமைப்புச் சட்டம்..................க்குடியுரிமையை மட்டும் வழங்குகிறது. **விடை : ஒற்றை**
3. இந்தியக் கடவுச் சீட்டினைப் பெற்று (Passport) வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன்..............என அழைக்கப்படுகிறார். **விடை : வெளிநாடு வாழ் இந்தியர்**
4. மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும்................யும் இயற்கையாக பெற்றிருக்கின்றனர். **விடை : குடிமைப் பொறுப்புகள்**
5. .......................என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும். **விடை : உலகளாவிய குடியுரிமை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பொருளியல்

## அலகு . 1. பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன.**

அ) தங்கம் ஆ) வெள்ளி
இ) வெண்கலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**2. இந்திய ரூபாய் குறியீட்டினை ( ) வடிவமைத்தவர் யார் ?**

அ) உதயகுமார் ஆ) அமர்த்தியாசென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

**விடை : அ) உதயகுமார்**

**3. பணத்தின் மதிப்பு**

அ) அக பணமதிப்பு ஆ) புற பண மதிப்பு
இ) அ மற்றும் ஆ ஈ) எதுவுமில்லை

**விடை : இ) அ மற்றும் ஆ**

**4. வங்கி பணம் என்பது எது ?**

அ) காசோலை ஆ) வரைவு
இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : அ) காசோலை**

**5. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.**
**முதலீட்டுக் கருவி போன்றவைகள் :**

அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள்
இ) பரஸ்பர நிதி ஈ) வரி செலுத்துவது

**விடை : ஈ) வரி செலுத்துவது**

**6. பின்வருவனவற்றில் கருப்புப்பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள் யார் ?**

அ) வரி ஏய்ப்பவர்கள் ஆ) பதுக்குபவர்கள்
இ) கடத்தல்காரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

**விடை : ஈ) மேற்கண்ட அனைத்தும்**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நிகழ்நிலை வங்கியை......................என்று அழைக்கலாம்.

**விடை : இணைய வங்கி**

2. பணம் எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே..................

**விடை : பணம்**

3. மின்னணு வங்கியை ...........................என்றும் அழைக்கலாம்.

**விடை : தேசிய மின்னணு நிதி பரிமாற்றம்**

4. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள்................... பணமாகும்.

**விடை : நெகிழி**

5. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு.................

**விடை : 1935**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | பண்டமாற்று முறை | வரி ஏமாற்றுபவர்கள் |
| 2. | இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் | மின்னணு பணம் |
| 3. | மின் – பணம் | நுகர்வு தவிர்த்த வருமானம் |
| 4. | சேமிப்பு | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 5. | கருப்பு பணம் | 1935 |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1.** | **பண்டமாற்று முறை** | **பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம்** |
| **2.** | **இந்திய ரிசர்வ் வங்கி சட்டம்** | **1935** |
| **3.** | **மின் – பணம்** | **மின்னணு பணம்** |
| **4.** | **சேமிப்பு** | **நுகர்வு தவிர்த்த வருமானம்** |
| **5.** | **கருப்பு பணம்** | **வரி ஏமாற்றுபவர்கள்** |

**IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி.**

**1. "பணம்" என்ற வார்த்தை எதன் மூலம் பெறப்பட்டது ?**

**விடை :**

பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான "மொனேட்டா ஜீனோ" விலிருந்து பெறப்பட்டது.

**2. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார் ?**

**விடை :**

இந்திய ரிசர்வ் வங்கி

**V. சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்.**

**1. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன.**

i. இருமுகத்தேவை பொருத்தமின்மை

ii. செல்வத்தை சேமிக்க சிரமமில்லை

iii. பொதுவான மதிப்பின் அளவுகோல்

iv. பொருட்களின் பகுபடாமை

அ) i மற்றும் ii சரி

ஆ) i மற்றும் iv சரி

இ) i, iii மற்றும் iv சரி

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : இ) i, iii மற்றும் iv சரி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# அலகு –2. பொது மற்றும் தனியார் துறைகள்

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. இந்தியாவில் பொதுத்துறைகளின் தோற்றத்திற்குக் காரணமான இந்திய அரசின் தொழில் கொள்கையின் தீர்மானம் .................. ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.**

அ) 1957 ஆ) 1958
இ) 1966 ஈ) 1956 **விடை : ஈ) 1956**

**2. கலப்புப் பொருளாதார நன்மைகளின் கலவை என்பது**

அ) முதலாளித்துவம் ஆ) சமதர்மம்
இ) அ மற்றும் ஆ சரி ஈ) அ மற்றும் ஆ தவறு

**விடை : இ) அ மற்றும் ஆ சரி**

**3. ........................ நிறுவனச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் முதன்மையான முக்கிய பங்குதாரர்**

அ) தனியார் துறை ஆ) கூட்டு துறை
இ) பொதுத் துறை ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : ஆ) கூட்டு துறை**

**4. பொதுத்துறை ........................ உடையது.**

அ) இலாப நோக்கம் ஆ) சேவை நோக்கம்
இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : ஆ) சேவை நோக்கம்**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ........................ மற்றும் .................. ஆகியவை சமூகத்தின் அனைத்து பிரிவினரின் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அந்தந்த பணிகளை மேற்கொள்வதில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**விடை : பொதுத் துறை, தனியார் துறை**

2. தனியார் துறை .................. நோக்கத்தில் செயல்படுகிறது .

**விடை : இலாப**

3. .................. என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

**விடை : சமூக பொருளாதார மேம்பாடு**

4. தனியார் துறையின் முக்கிய செயல்பாடுகளை தோற்றுவிப்பது ........................ மற்றும் ................ ஆகும்.

**விடை : புதுமை, நவீனமயமாதல்**

5. குடிமக்கள் மத்தியில் ................ மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

**விடை : சமூக பொருளாதார மேம்பாடு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - **625001**

94430 43338

94430 46662

www.Padasalai.Net